








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 25 18.06.2025





आचार्य देवो भव

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள்

## உபதேசங்கள்



ஹம்பியில் ராமானுஜர்

# முத்துக்கள்

1. எந்த பக்கதிதில் யோகேஸ்வரனான கண்ணன் இருக்கிறானோ, எந்த பக்கத்தில் அர்ஜு ன ன் வில்லை ஏந்தி நிற்கிறானோ அந்த பக்கத்தில் தான் **வெற்றி, நிலை நின்ற நியாயம், நிலையான செல்வம்** குடி கொண்டிருக்கும் – (ஸஞ்சயன் பகவத் கீதையில்)

2. ஸ்ரீ பாஞ்சராத்ரம் என்ற ஆகமத்தை முதலில் உபதேசித்தவன் எம்பெருமான். இதில் வேதத்திற்கு முரண்பாடான அம்சம் ஏதும் கிடையாது. ஆகையால் இந்த ஆகமம் முற்றும் ப்ரமாணமே ஆகும். பரமைகாந்திகள் யாவரும் இதைப் பின்பற்றி, இதில் கூறிய வகையில் எம்பெருமானை ஆராதிக்கலாம் என்று இதைப் பாதுகாத்துத் தந்தவர் நம் எம்பெருமானார் ஆவர். இங்கு ராத்ரம் என்ற சொல் பகலும் இரவும் கொண்ட நாள் முழுவதையும் குறிக்கிறது. ஆக ஐந்து நாட்களில் பஞ்சாயுதங்களின் அம்சமாய்த் தோன்றிய சாண்டில்யர், ஔபகாயநர், மௌஞ்ஜாயநர், கௌசிகர், பாரத்வாஜர் என்ற ஐந்து மகரிஷிகளுக்கும் எம்பெருமான் இந்த ஆகமத்தை உபதேசித்தார். ஆகையால் இதற்குப் **பாஞ்சராத்ரம்** என்ற பெயர் உண்டாயிற்று.

3. **பாப புண்ய கர்மாக்களின் வகைகள்**:
   # **ஸஞ்சித** கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பிக்காதவை - இந்த கர்மாக்களின் பலன்கள் அனுபவித்து முடிய எத்தனை பிறவிகள் ஆகலாம் என கணிக்க முடியாத அளவிற்கு அதிகமானவை.
   # **ப்ராரப்த** கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பித்தவை - இந்த கர்மாக்களின் பலன்கள் முடிய ஒன்றோ அல்லது ஒரு சில பிறவிகளோ ஆகலாம்.
   # சாஸ்த்ர விதிப்படி ‘பக்தி யோகம்’ அல்லது ‘சரணாகதி’ அனுஷ்டித்தவர்களுக்கு ஸஞ்சித கர்மாக்கள் மற்றும் ப்ராரப்த கர்மாக்கள் விலகும் முறையை சாஸ்த்ரங்கள் இவ்வாறு கூறுகின்றன:
   # பக்தி யோகம் செய்பவர்களுக்கு, அவர்களுடைய ஸஞ்சித கர்மாக்களை பக்தி யோகத்தின் துவக்கதில் அதற்கான விலக்கை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் அனுக்ரஹித்து விடுகிறான்.
   # சரணாகதர்களுக்கு (த்ருப்த ப்ரபன்னர்களுக்கு), அந்த அனுஷ்டான துவக்கத்தில், அதாவது த்வய மந்த்ர உச்சரிப்பின் ஆரம்பத்தில், ஸஞ்சித கர்மாக்களையும் மற்றும் அடுத்த சில பிறவிகளைக் கொடுக்க வல்ல ப்ராரப்த கர்மாக்களையும் விலக்க ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் அனுக்ரஹித்து விடுகிறான்.

4. 1. நமக்கு நாராயணனோடு **மட்டுமே “ஒழிக்க ஒழியா உறவு**” இருக்கிறது.
   2. நமக்கு புத்தி இருக்கிறது.
   3. நாராயணனுக்கு மட்டுமே தகுதி இருக்கிறது.
   4. நாம் நாராயணனுக்கு “சாயை அழிவு” பண்ணக் கூடாது.

5. நமக்குக் கற்பு நெறி இருக்கிறது.
6. நமக்குப் பாவம் சேர வேண்டாம்.
7. நமக்கு (பிரபன்னர்களுக்கு) உத்தர க்ருத்யத்தில் துளைகள் வேண்டாம்.
8. முமுக்ஷுவுக்குத் தேவதாந்தரத்தால் ஆகக் கூடிய பயன் ஏதும் இல்லை.
இந்த எட்டு காரணங்களால் நாம் **அந்நிய தேவதைகளைத்** தவிர்க்கிறோம்.

5. பெருமாள் கோவில்களில் மூன்று முறை தீர்த்தம் ஏன்?
முதல் முறை தீர்த்தம் ஸ்வீகரிப்பது
1. ப்ரதமம் கார்ய சித்யர்த்தம்
என்றபடி நம் செயல்களில் வெற்றி பெற (**ஜ்ஞானத்தை** வேண்டி) ஸங்கல்பம் செய்துகொள்வது.
இரண்டாம் முறை தீர்த்தம் ஸ்வீகரிப்பது
2. த்விதீயம் தர்மஸ்தாபனம்
என்றபடி, நாம் **நெறியை**க் கடைப்பிடிக்க ஸங்கல்பம் செய்துகொள்வது.
மூன்றாம் முறை தீர்த்தம் ஸ்வீகரிப்பது
3. த்ரிதீயம் மோக்ஷ ப்ரோக்தம் குணார்னவம்
என்றபடி, மெய்ப்பொருளான பகவானை உணர ஸங்கல்பம் செய்து கொள்ளும் **மோக்ஷ** உபாயம்.

6. மண்தான் பானையாக மாறுகிறது. ஆனால் அதுவே அவ்விதம் மாறவில்லை. சேதனனான குயவன் தன் ஜ்ஞான சக்திகளால் அதை அவ்விதம் மாற்றுகிறான். ஒருவன் பானையை விரும்புகிறான். மற்றவன் அகலை ஆசைப்படுகிறான். வேறொருவன் சால் வேண்டும் என்கிறான். மண்தான் இத்தனை பொருள்களாகவும் ஆகிறது. ஆனால் அவரவர் விருப்பப்படி அதுவே அந்த அந்த விதம் மாறுவதில்லை. குயவன் தான் அவரவர் விருப்பப்படி அதைப் பலவாறாக ஆக்கி அவரவர்களுக்குக் கொடுக்கிறான். இவ்விதமே அவரவர் செய்த கர்மங்களை அநுஸரித்துச் செய்யும் பகவத்ஸங்கல்பத்துக்கு அநுகுணமாகத்தான், பிரகிருதி பலவாறாகப் பரிணமிக்கிறது. இவன் மனுஷ்ய தேகம் பெறக்கூடிய புண்ணியம் செய்திருக்கிறபடியால் இவனுக்கு மனுஷ்ய தேகமாகவும், அவன் பன்றி உடல் கிடைக்கக்கூடிய பாவத்தைச் செய்திருக்கிறபடியால் அவனுக்குப் பன்றி உடலாகவும் ஆக வேண்டும் என்பதை அசேதனமான பிரகிருதி அறிந்து அந்த அந்த விதம் மாறுபடுமா? அதற்கு அறியக்கூடிய யோக்கியதையும் இல்லை ; தானாக மாறுபடக்கூடிய சக்தியும் இல்லை.

7. **மாநுஷீம் தநுமாஸ்ரிதம்** - மனித உருவம் போன்ற உருவத்தை ஏற்றுக்கொண்ட, பகவானுடைய திருமேனியின் அமைப்பு, மனித உடல் போல் தோன்றுமே தவிர, அது மனித உடலைப்போல் ப்ராக்ருதமன்று, அதாவது புண்ணிய பாபங்களால் ஏற்படக்கூடியதும், மாம்ஸம் இரத்தம்

மலம் மூத்திரம் முதலியன நிரம்பியதும், பாஞ்சபௌதிகமுமான (பிரகிருதி கார்யங்களான பஞ்சபூதங்களின் - பூமி ஜலம் அக்கினி வாயு ஆகாசம் இவற்றின் ஸங்காதமான) சரீரம் போன்றதல்ல. மண்ணாலும் குடம் செய்யலாம், வெள்ளியினாலும் செய்யலாம், தங்கத்தினாலும் செய்யலாம். எந்தத் திரவியத்தால் செய்யப் பெற்றிருந்தாலும் குடத்தின் அமைப்பு ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். குடத்துக்கு இருக்க வேண்டிய அமைப்பு இல்லாமற் போனால் அதைக் குடம் என்றே வ்யஹரிக்க முடியாதே. அமைப்பு ஒன்றாக இருந்தாலும் மண்குடத்தை வெள்ளிக் குடம் என்று சொல்வதில்லை. வெள்ளிக் குடத்தைப் பொற்குடம் என்று சொல்லுவதில்லை. இம்மாதிரியே பொற்குடத்தை வெள்ளிக் குடம் என்றோ மண்குடம் என்றோ சொல்லுவதில்லை. இதற்குக் காரணம், அமைப்பு ஒரே மாதிரி இருந்தாலும் காரணமான திரவியம் (மண் வெள்ளி, பொன்) வெவ்வேறுபட்டிருப்பதுதான். இம்மாதிரியே பகவானுடைய திருமேனி மனித உருவம் போல் இருந்தாலும் அது ப்ராக்ருதமன்று; அப்ராக்ருதம்.
மத்ஸ்யாதி அவதாரங்களிலும் அவன் திருமேனி அப்ராக்ருதமே என்பது அறியத்தக்கது.

8. தேவர்களும் மகரிஷிகளும் அதீந்திரியங்களையும் அதாவது நாம் கண்ணால் காண முடியாதவற்றையும் காணக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள். நம்மைக்காட்டிலும் மிகவும் அதிகமான ஜ்ஞானம் படைத்தவர்கள். இத்தகையவர்களும் பகவானின் பெருமைகளை உள்ளது உள்ளவாறு அறிய முடியாது என்றால் நம்மைப் போன்றவர்களைப்பற்றிக் கேட்பானேன்?

9. பகவான் நமக்குப் பிதாவாகவும் நண்பனாகவும் இருப்பதனால், அவனுக்குப் புத்திரர்களாகவும் நண்பர்களாகவும் இருக்கும் நம்மை உறவைக் கொண்டு அல்ப வ்யாபாரத்தாலே க்ஷமித்தருளுவான். ஆகையால், நாம் பண்ணின அநந்தாபராதங்களுக்கு, சரணாகதியாகிற இந்த அல்ப வ்யாபாரம் ப்ராயச்சித்தமாகுமா என்று கவலைப்படவேண்டாம். இதைத்தான் ஆண்டாள், 'உன் தன்னோடுறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது, அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன் தன்னைச்சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே' என்பதனால் வெளியிடுகிறாள்.
கோபிகா ஸ்திரீகள், முதலில் பகவானுடைய பரத்துவத்தை மாத்திரம் கண்டு, 'நாராயண' என்றும், 'தேவாதிதேவ' என்றும் அழைத்து வந்தனர். அவனுடைய ஸௌலப்யத்தை அறிந்தபிறகு, பரத்துவத்தைத் தெரிவிக்கும் நாராயண, தேவாதிதேவ என்பன போன்ற சிறு பேரைச் (சிலர் மாத்திரம்) அறியக்கூடிய பெயரைச்) சொல்லி அழைத்தது தவறு என்பதை உணர்ந்து, அறியாமையினாலும் அன்பினாலும் நம்பிக்கையினாலும் தாங்கள் செய்த அறியாமையின் தவறுகளைப் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கும்போது ஒழிக்க முடியாத உறவைத் தெரிவிக்கின்றனர். அர்ஜுனன் முதலில் ஸௌலப்யத்தை மாத்திரம் கண்டு விச்வரூப தர்சனத்தின்போது பரத்துவத்தைக்

கண்டவன் கோபிகா ஸ்திரீகள் முதலில் பரத்துவத்தைக் கண்டு பிறகு ஸௌலப்யத்தைக் கண்டவர்கள். இதுவே இவர்களுக்கு வாசி. நாராயண என்ற சப்தத்தின் பொருளை அனைவரும் அறிய முடியாதாகையாலும், அது பகவானுடைய பரத்துவத்தை தெரிவிக்கிற படியாலும் சிறுபெயராயிற்று. கோவிந்தா என்ற சப்தத்தின் பொருளை (மாடு மேய்ப்பவன்) அனைவரும் அறியலாமாகையாலும், அது பகவானுடைய பரம ஸௌலப்யத்தைக் காட்டு கிறபடியாலும் பெரும் பெயராயிற்று என்பது அறியத்தக்கது.

10. உடல் பூமியில் நன்றாகப் படியும்படி செய்து அதாவது லாஷ்டாங்கமாகத் தண்டம் ஸமர்ப்பித்து. மனத்தில் நினைத்ததையே பாக்கால் சொல்ல வேண்டும்; சொல்கிறபடியே நடக்க வேண்டும். இதுவே கரண பூர்த்தி எனப்பெறுகிறது. அர்ஜுனன் பகவானை மிகவும் யர்ந்தவன் என்று நினைத்து மானஸிகமாக மாத்திரம் அவனைத் ஞ்சமாகப் பற்றவில்லை; காயிகமாகவும் வணங்கினான் என்பதை ப்ரணிதாய காயம்' என்ற சொல் தெரிவிக்கிறது.

**11.** சிலவற்றைச் செய்வதற்கும், சிலவற்றைச் செய்யாமல் இருப்பதற்கும் காரணங்களான மனோவ்யாபாரங்கள் அனைத்தும் **பகவத் ஸங்கல்பாதீனங்கள்.**

12. நாம் உபாஸிக்க வேண்டிய **பகவான் மிகவும் எளியவன்**. ஆகையால் அவனைப் பூஜிப்பது மிகவும் எளிது. அனைவரும் அவனை ஆராதிக்கலாம்.பக்திதான் மிகவும் முக்கியமானது. அது இருந்துவிட்டால் பொருளைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டாம்.

